**செய்தி வெளியீடு எண்: 566** **நாள்: 28.09.2012**

<u>செய்தி வெளியீடு</u>

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் தலைமையில், பொங்கல் பண்டிகையை முன்னிட்டு தமிழக அரசால் வழங்கப்படும் விலையில்லா வேட்டிகள் மற்றும் சேலைகளின் தற்போதைய உற்பத்தி நிலவரம் மற்றும் விநியோகம் குறித்து இன்று (28.9.2012) தலைமைச் செயலகத்தில் விரிவான ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தின் முடிவில், நடப்பாண்டில் விநியோகம் செய்யப்பட வேண்டிய வேட்டிகள் மற்றும் சேலைகளை 15.10.2012–க்குள் வழங்கிட மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டார்கள். மேலும், 2013–ஆம் ஆண்டு பொங்கல் பண்டிகையை முன்னிட்டு வழங்க வேண்டிய 1 கோடியே 70 லட்சம் விலையில்லா வேட்டிகள் மற்றும் 1 கோடியே 70 லட்சம் விலையில்லா சேலைகள், என மொத்தம் 3 கோடியே 40 லட்சம் விலையில்லா வேட்டிகள் மற்றும் சேலைகளை வழங்கும் பணி 1.1.2013 அன்று ஆரம்பிக்கப்பட்டு பொங்கல் பண்டிகை நாட்களுக்குள் அனைவருக்கும் அளிக்கப்பட வேண்டும் என்றும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டார்கள்.

இந்தக் கூட்டத்தில், மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர், தலைமைச் செயலாளர், நிதித் துறை முதன்மைச் செயலாளர், வருவாய்த் துறை முதன்மைச் செயலாளர், கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறைச் செயலாளர் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

*******

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9.
நாள்: 28.9.2012